## அசாமில் இருந்து குஜராத் & கர்நாடகா முதல் ஹரியானா வரை: ஃப்ளிப்கார்ட் வரவிருக்கும் பண்டிகை காலத்தை முன்னிட்டு அதன் விநியோகச் சங்கிலியை பலப்படுத்துகிறது

- *நாடு முழுவதும் 66 புதிய ஈடேற்றம் மற்றும் வகைப்படுத்தல் மையங்களைச் சேர்க்கிறது, 10 மில்லியன் சதுர அடி பரப்பளவு மற்றும் சுமார் 20 மில்லியன் கன அடி சேமிப்பு இடம் சேர்க்கப்பட்டுள்ளது*
- *நாட்டின் தொலைதூர மூலைகளை அடையும் 1,000 க்கும் மேற்பட்ட டெலிவரி மையங்களைச் சேர்ப்பதன் மூலம் கடைசி மைல் விநியோகத்தை வலுப்படுத்துகிறது மற்றும் கிராணாக்களுடனான கூட்டாண்மையை விரிவுபடுத்தியுள்ளது*
- *15% பன்முகத்தன்மை கொண்ட பணியமர்த்தலுடன் அதன் விநியோகச் சங்கிலியில் 1,15,000 கூடுதல் பருவகால வேலைவாய்ப்புகளை உருவாக்கியுள்ளது*

**பெங்களூரு-செப்டம்பர் 15, 2021:** இந்தியாவின் உள்நாட்டு மின்-வர்த்தகச் சந்தையான ஃபிளிப்கார்ட், பண்டிகை காலத்தை முன்னிட்டு நாடு முழுவதும் அதன் விநியோகச் சங்கிலியை வலுப்படுத்தி விரிவுபடுத்தியுள்ளது. லட்சக்கணக்கான MSMEகள், விற்பனையாளர்கள், கைவினைஞர்கள் மற்றும் கிரானாக்களுக்கான சந்தை அணுகல் சாத்தியமாக்கியுள்ளது. இதற்காக, அசாம், சட்டீஸ்கர், குஜராத், ஹரியானா, கர்நாடகா, மகாராஷ்டிரா, ஒடிசா, பஞ்சாப், ராஜஸ்தான், தமிழ்நாடு, தெலுங்கானா மற்றும் மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களில் 66 புதிய பெரிய அளவிலான ஈடேற்றல் மற்றும் வகைப்படுத்தல் மையங்களை ஃபிளிப்கார்ட் சேர்த்துள்ளது.

இது தவிர, நாடு முழுவதும் 1,000 க்கும் மேற்பட்ட புதிய டெலிவரி மையங்களை (DH) சேர்ப்பதன் மூலம் ஃபிளிப்கார்ட் தனது லாஸ்ட் மைல் வரம்பை வலுப்படுத்தியுள்ளது. பிக் பில்லியன் நாட்களின் சிக்கலான தன்மை மற்றும் அளவுகளுக்கு திறன், சேமிப்பு, வரிசைப்படுத்துதல், பேக்கேஜிங், மனித வளம், பயிற்சி மற்றும் விநியோகத்திற்கான கூடுதல் ஆதரவு தேவை, இது பண்டிகை காலத்தில் கூடுதல் வேலைவாய்ப்பை உருவாக்க உதவுகிறது. ஃப்ளிப்கார்ட் தனது 'கடைசி மைல் டெலிவரி பார்ட்னர்ஷிப்' திட்டத்தின் ஒரு பகுதியாக கிராணாக்களுடனான கூட்டாண்மையை வலுப்படுத்தி, தொழில்நுட்பம் இயக்கப்பட்ட டிஜிட்டல் சூழலின் ஒரு பகுதியாக மாற உதவியது. இந்த ஆண்டு, ஃபிளிப்கார்ட் 1,15,000 க்கும் மேற்பட்ட மக்களுக்கு நேரடி பருவகால வேலைவாய்ப்பை உருவாக்கியுள்ளது, அதில் 15% பெண்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

*நாட்டின் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சியில் மின்-வர்த்தகத்தின் பங்களிப்பு குறித்து, **ஃப்ளிப்கார்ட் குழுமத்தின் தலைமை நிர்வாக அதிகாரி கல்யாண் கிருஷ்ணமூர்த்தி** அவர்கள், "விற்பனையாளர்கள் மற்றும் நுகர்வோருக்கு மதிப்பு மற்றும் அணுகலை வழங்கும் மின்-வர்த்தகம் ஒரு சக்திவாய்ந்த ஆற்றலாகத் திகழ்கிறது. எங்கள் விநியோகச் சங்கிலி உள்கட்டமைப்பு மற்றும் தொழில்நுட்பம் இயக்கப்பட்ட டிஜிட்டல் சுற்றுச்சூழல் அமைப்பு பல லட்சம் புதிய வேலைகளை உருவாக்குவதன் மூலம் பல சாத்தியக்கூறுகளை செயல்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது, மேலும் பாரம்பரிய கிடங்குகளுக்கு நம்பகமான மற்றும் தொழில்நுட்ப வசதியுள்ள உருமாற்றத்தை வழங்குகிறது, உள்ளூர் விற்பனையாளர்கள், MSME கள், கிரானாக்கள், விவசாயிகள் மற்றும் குறைந்த சந்தை வாய்ப்பு கொண்ட சமூகங்களை ஒரு தேசிய சந்தையுடன் இணைக்கிறது. ஃபிளிப்கார்ட் இந்தியாவிற்கான வாய்ப்புகளை உருவாக்கி, தொழில் மற்றும் பொருளாதாரத்தை இயக்குகிறது, மேலும் எங்கள் விற்பனையாளர்கள், கைவினைஞர்கள் மற்றும் நெசவாளர்களுக்கு நாட்டின் தொலைதூர பகுதிகளுக்கு வழங்க உதவுகிறது. உள்கட்டமைப்பு உருவாக்கம், வேலைவாய்ப்பு உருவாக்கம் மற்றும் தொழில்முனைவோரின் சூழல் அமைப்பில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்த நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்" என்று கூறினார்.*

பண்டிகை காலங்களில், இந்தியா முழுவதிலுமிருந்து லட்சக்கணக்கான விற்பனையாளர்களை ஆதரிப்பதற்காக, நாடு முழுவதும் சரக்கு போக்குவரத்தை தடையின்றி வழங்குவதற்காக விநியோகச் சங்கிலியை மேம்படுத்த வேண்டும், இது மிகச்சிறந்த வாடிக்கையாளர் அனுபவத்தை வழங்க உதவுகிறது. விநியோகச் சங்கிலியை விரிவாக்குவதில் ஃபிளிப்கார்ட்டின் முயற்சி ஒருபுறம் விற்பனையாளர்களுக்கு

உதவுகிறது, அதே நேரத்தில் நாடு முழுவதும் லட்சக்கணக்கான நேரடி மற்றும் மறைமுக வேலைகளையும் உருவாக்குகிறது.

ஃபிளிப்கார்ட் அதன் வினியோனச் சங்கிலி வலையமைப்பு முழுவதும் அதன் ஊழியர்களின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுக்கு முன்னுரிமை அளித்து வருகிறது மற்றும் ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களின் தடுப்பூசிகளுடன் கோவிட் -19க்குப் பொருத்தமான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது.

***2021 க்கான முக்கிய விநியோகச் சங்கிலி விரிவாக்க முயற்சிகள் பின்வருமாறு:***

- வாடிக்கையாளர்கள் விரைவான விநியோகத்தை பெற 100 க்கும் மேற்பட்ட வசதிகள் பிராண்ட் பார்ட்னர்களிடமிருந்து சேர்க்கப்பட்டுள்ளன
- விநியோக பங்காளிகளாக கிராணாக்களைக் கொண்டிருக்கும் மாற்று விநியோக முறை, 1,00,000 கிரானா பங்காளிகளுடன் பலப்படுத்தப்பட்டுள்ளது
- மறைமுக வேலை வாய்ப்புகளை உருவாக்கும் அதே வேளையில் விரைவான விநியோகங்களை உருவாக்க நாடு முழுவதும் உள்ள பல மூன்றாம் தரப்பு லாஜிஸ்டிக்ஸ் கூட்டாளர்களுடன் இணைந்து பணியாற்றப்படுகிறது.
- மொபைல்கள், பெரிய உபகரணங்கள், ஃபர்னிச்சர்கள் மற்றும் ஐடி சாதனங்களுக்காக 8,000 க்கும் மேற்பட்ட பயிற்சி பெற்ற சேவை தொழில்நுட்ப வல்லுநர்களுடன் ஜீவ்ஸ் மூலம் 17,700 அஞ்சல் குறியீடுகளில் வாடிக்கையாளர்களுக்கு சேவை செய்கிறார்கள்.

கடந்த சில மாதங்களில், வணிகங்களை புத்துயிர் பெறுவதிலும் விற்பனையாளர்கள் தங்கள் பொருளாதார மீட்சியை வலுப்படுத்த உதவுவதிலும், வாடிக்கையாளர்களுக்கு பாதுகாப்பான மற்றும் சுத்திகரிக்கப்பட்ட முறையில் தயாரிப்புகளை வழங்குவதிலும், உள்ளூர் வேலைவாய்ப்பை உருவாக்குவதில் பன்மடங்கு விளைவை உருவாக்குவதிலும் மின்-வர்த்தகம் முக்கிய பங்கு வகிக்கிறது. பண்டிகை காலத்துக்காக ஃபிளிப்கார்ட்டில் இருந்து செய்யப்படும் முதலீடுகள் முழு சூழல் அமைப்பிற்கும் இந்த நன்மைகளை மேலும் அதிகரிக்கும்.

**பிளிப்கார்ட் குழுமம் குறித்து**

இந்தியாவின் முன்னணி டிஜிட்டல் வர்த்தகக் குழுமமாகத் திகழும் ஃபிளிப்கார்ட் குழுமம், ஃபிளிப்கார்ட், மிந்த்ரா, ஃபிளிப்கார்ட் ஹோல்சேல் மற்றும் கிளியர்டிரிப் மற்றும் இந்தியாவின் முன்னணி பேமெண்ட்ஸ் ஆப்ஸ்களில் ஒன்றான ஃபோன்பே ஆகிய குழும நிறுவனங்களின் முதன்மை பங்குதாரராகவுள்ளது.

2007 – ம் ஆண்டு துவக்கப்பட்ட ஃபிளிப்கார்ட், பல மில்லியன் நுகர்வோர்கள், விற்பனையாளர்கள், வணிகர்கள் மற்றும் சிறு வர்த்தகத்தினர் இந்தியாவின் மின்-வர்த்தகப் புரட்சியின் ஒரு பகுதியாகத் திகழ்வதை ஏதுவாக்கியுள்ளது. 350 மில்லியனுக்கும் மேற்பட்ட பதிவு செய்த வாடிக்கையாளர் அடித்தளத்துடன், 150 மில்லியனுக்கும் மேற்பட்ட தயாரிப்புகளை 80 – க்கும் மேற்பட்ட வகையினங்களில் ஃபிளிப்கார்ட் சேவையாற்றுகிறது. இந்தியாவில், மின்-வர்த்தகத்தை ஜனநாயகப்படுத்தும் எங்களது முயற்சிகள், அணுகுத்தன்மை மற்றும் கட்டுப்படியாகக் கூடிய தன்மையை மேம்படுத்துகிறது, வாடிக்கையாளர்களை மகிழ்விக்கிறது மற்றும் சூழலமைப்பில் பல லட்சம் பணிகளை உருவாக்குகிறது மற்றும் பல துலைமுறை தொழில்முனைவோர்களுக்கு திறனளிக்கிறது மற்றும் MSME-க்கள், புத்தாக்கத்தை முன்னின்று நடத்தி, பல தொழில்துறை முதல் அம்சங்களை சாத்தியமாக்குவதை ஏதுவாக்கிவருகிறது. கேஷ் ஆன் டெலிவரி, நோ காஸ்ட் EMI மற்றும் ஈசி ரிட்டர்ன்ஸ் போன்ற பல்வேறு வாடிக்கையாளரை-மையமாகக் கொண்ட புத்தாக்கங்களின் வழியாக ஆன்லைன் ஷாப்பிங்கை அதிகம் அணுகத்தக்கதாகவும் மற்றம் கட்டுப்படியாகக்கூடியதாகவும் பல மில்லியன் இந்தியர்களுக்கு இந்நிறுவனம் மாற்றுகிறது. ஆன்லைன் ஃபேஷன் சந்தையில் மிந்தரா மற்றும் ஜபாங், இந்தியாவின் வேகமாக வளர்ந்து வரும் டிஜிட்டல் பேமெண்ட்கள் அடித்தளம் ஃபோன்பே ஆகியவற்றின் வழியாக, இந்திய வர்த்தகத்தின் மாற்றத்தினை தொழில்நுட்பத்தின் வழியாக வழிநடத்திவருகிறது.

**மேலதிக தகவல்களுக்கு, தொடர்பு கொள்ளவும் media@flipkart.com.**